


இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (6.8.2023) சென்னை, ஆளுநர் மாளிகையில் உள்ள தர்பார் ஹால், பாரதியார் மண்டபம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அம்மண்டபத்தையும், மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவப் படத்தையும் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## டெல்லியில் அதிகரிக்கும் தொற்றுநோய்!

புதுடெல்லி,ஆக.7-

பருவமழை தொடர்பான தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு அதிக அளவிலான நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவதாக டெல்லி மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் சுகாதாரத்தைப் பேண வேண்டும் எனவும், மருந்து, மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையின்றி சாப்பிட வேண்டாம் எனவும் தெரிவித்துள்ளனர்.



சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பாரதியார் மண்டபம் மற்றும் மகாகவி பாரதியார் திருவுருவப் படத் திறப்பு விழாவிற்கு வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு நேற்று (6.8.2023) முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நினைவுப் பரிசினை வழங்கினார்.

### வன்முறைக் கும்பல் மீண்டும் நடத்திய

# துப்பாக்கி சூட்டில் 6 பேர் பலி; 16 பேர் காயம்!

### மணிப்பூர் கலவரங்களில் இதுவரை 160 பேர் பலி தொடரும் சோகம்!



கவுஹாத்தி, ஆக. 7

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரில் கடந்த மே மாதம் 3ந்தேதி தொடங்கிய கலவரத் தீ இன்று வரை கொளுந்து விட்டு எரிந்து வருகிறது. அந்த மாநிலத்தில் வசித்து வரும் மெய்தி மற்றும் குகி சமூக மக்களிடையே ஏற்பட்ட மோதல் வன்முறையில் இதுவரை 160 பேர் வரை பலியாகியுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்துள்ளனர். வீடுகள், கடைகள் சூறையாடப்பட்டதால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வீடுகளை இழந்து நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். மாநிலம் முழுவதும் போலீசார் மற்றும் துணை ராணுவ படை வீரர்கள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வரும் நிலையில், வன்முறை சம்பவங்கள் ஆங்காங்கே அரங்கேறும் அவலம் நிறைவேறி வருகிறது.

இது பற்றிய விவரம் வருமாறு :

மணிப்பூரில் கடந்த சனிக்கிழமை (5.8.2023) நடந்த இரு குழுவினருக்கு இடையிலான இனக்கலவர சம்பவத்தில் துப்பாக்கிச்சூடு மற்றும் சிறுரக பீரங்கி தாக்குதல் நடத்தப்பட்டு 6 பேர் கொல்லப்பட்டதுடன், 16 பேர் காயமடைந்தனர்.

பிஷ்ணுபூர் மாவட்டத்தின் குவாக்தா பகுதியில் தங்கள் வீடுகளில் தந்தை மற்றும் மகன் உட்பட மூன்று பேர் விடியற்காலையில் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அப்பகுதி முழுவதும் சிறுரக பீரங்கி மற்றும் கையெறி குண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மூன்று பேர் கொல்லப்பட்டதைக் கண்டித்து மக்கள் டயர்கள் மற்றும் பிற பொருட்களை எரித்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

பிஷ்ணுபூர் மாவட்டத்தின் நரன்சீனாவில் உள்ள 2வது இந்திய ரிசர்வ் பட்டாலியன் தலைமையக ஆயுதக் கிடங்கில் இருந்து வியாழக்கிழமை கொள்ளையடிக்கப்பட்ட தானியங்கி மற்றும் செமி ஆட்டோமேட்டிக் ஆயுதங்கள் மற்றும் சிறுரக பீரங்கிகளை கொண்டு வன்முறையாளர்கள் இந்த புதிய தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.








கையெறி குண்டுகள் மற்றும் அவற்றை நீண்ட தூரம் கொண்டு செல்லத் தேவையான ஜி.எஃப் துப்பாக்கிகள், எச்.ஐ.வி சிறுரக பீரங்கிகள் ஆகியவற்றை வன்முறை கும்பல் கொள்ளையடித்திருக்கலாம் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யும்னம் பிஷாக் மெய்ட்டி (67), அவரது மகன் யும்னம் பிரேம்குமார் மெய்ட்டி (39), பக்கத்து வீட்டுக்காரர் யும்னம் ஜித்தன் மெய்ட்டி (46) ஆகியோர் மணிப்பூரில் உள்ள நிவாரண முகாம்களில் வசித்து வந்தனர். வீடுகளுக்கு திரும்பிய அவர்களை கூர்மையான ஆயுதங்களால் உடலின் வெவ்வேறு பகுதிகளில் தாக்கப்பட்ட பின்னர் சுடப்பட்டனர். இந்த செய்தியை அறிந்ததும், விடியற்காலையில் குவாக்தா பகுதியில் பதற்றம் அதிகரித்தது. உரிபோக் நகரில் ஏராளமான பெண்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். அவர்கள் பிரதமர் மோடி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரின் கொடும்பாவிகளை எரித்ததுடன், அதிகரித்து வரும் வன்முறையை உடனடியாக நிறுத்தவும் கோஷமிட்டனர்.

சில மணி நேரங்களுக்குப் பிறகு, பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சூரசந்த்பூர் மாவட்டத்தில் உள்ள குவாக்தாவின் இரண்டு பக்கத்து கிராமங்களான பூஜாங் மற்றும் சோங்டோவில் துப்பாக்கிகள், சிறுரக பீரங்கி குண்டுகள் மற்றும் கையெறி குண்டுகளால் பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் இரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் 13 பேர் படுகாயமடைந்தனர்.

விசாரணையில் இறந்தவர்கள் ஜானி (30), ஜாங்கோமாங் (34) என அடையாளம் காணப்பட்டுள்ளனர். பிஷ்ணுபூர் மாவட்டத்தில் உள்ள தெரகோங்சங்பி என்ற இடத்தில் ஒரே நேரத்தில் நடந்த தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார், போலீஸ் கமாண்டோ உட்பட மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர்.

இம்பால் கிழக்கு மாவட்டத்தில் உள்ள சனசாபி மற்றும் தம்னாபோக்பி ஆகிய கிராமங்களில் அடையாளம் தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் நடந்துள்ளன. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. அடையாளம் தெரியாத விஷமிகள் இம்பால் மேற்கு மாவட்டத்தில் உள்ள டி லங்கோல் வீடுகளையும் எரித்தனர்.

ஒரு வாரத்திற்கு முன்னர் இப்பகுதியில் இராணுவம் ரோந்து சுற்றிவந்து கொண்டிருந்தது, ஆனால் அது திரும்பப் பெறப்பட்ட பின்னர் மீண்டும் கலவரம் வெடித்து, மணிப்பூரின் துயரம் இன்னும் தொடர்கதையாகவே இருந்து வருகிறது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.08.2023) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவாக அவரின் நினனவிடத்தின் அருகாமையில் பேனா சின்னம் அமைப்பதற்கான தமிழக அரசின் முடிவை எதிர்த்து மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இரண்டு வழக்குகளிலும் தமிழக அரசின் சார்பாக மாநிலங்களவை உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் அவர்கள் ஆஜராகி வாதாடி வெற்றி பெற்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி!

### சூரியனார்கோயில் ஆதீனம் பேட்டி!

தஞ்சாவூர்,ஆக.7-

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று சூரியனார்கோயில் ஆதீனம் கூறினார்.

தஞ்சாவூரில் நேற்று தேசிய திருக்கோயில்கள் கூட்டமைப்பின் மாவட்ட ஆன்மிக மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் சூரியனார் கோயில் ஆதீனம் 28வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தவத்திரு சிவநந்தி அடிகளார் கலந்து கொண்டார்.

பின்னர் அவர் அளித்த பேட்டி வருமாறு:

தமிழகத்தில் 6 லட்சத்து 36 ஆயிரம் கோயில்கள் உள்ளன. அவற்றில் பூஜை முடிந்த பின் அனைவருக்கும் வழிபடுவதற்கான உரிய வழிமுறை பின்பற்றப்பட வேண்டும்.தமிழகத்தில் 6ல் 4 பாகம் நிலங்கள் ஆதீனம், கோயில்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றில் 90 சதவீதம் வருவாய் வரக்கூடியவை. கோயில்களுக்கு ஒரு யூனிட் மின்சாரத்திற்கு ரூ.10 வரையிலும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதை குறைக்க வேண்டும். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, இது தான் நமது கொள்கை.

இவ்வாறு அவர் கூறினார்.

